بسم الله الرحمن الرحيم

அளவற்ற அருளாளனும், நிகரற்ற அன்புடையோனுமாகிய அல்லாஹ்வின் திருப்பெயரால் ...

# AL QALAM INTERNATIONAL SCHOOL – CBSE

## “நேற்று, இன்று, நாளை”

## “Yesterday, Today and Tomorrow”

وَبِالْوَالِدَيْنِ اِحْسَانًا

## And that you be kind to Parents

**பெற்றோர்களுடன் கருணையுடன் நடந்து கொள்க.**

**(அல் குர்ஆன் 17:23)**

## A talk delivered by



His Eminence

**ABDUL QUDDOOS AZHARI,BAQAVI,QASIMI**

(NATIONAL GRAND MUFTI OF AUSTRALIA)

MA,Grad Dip.Edu (Australia) ESL New Zealand

Founder and Chairman

QALAM GROUP OF INSTITUTION, INDIA

AUSTRALIAN INTERNATIONAL ISLAMIC COLLEGES, AUSTRALIA.

# 3rd KINDERGARTEN GRADUATION DAY

**Sunday, 26th February 2023**

**Venue: Al Qalam International School – CBSE,**

**Perungulam, Ramanathapuram, TamilNadu, India – 623 536.**

اَلسَّلَامُ عَلَيْكُمْ وَرَحْمَةُ اللهِ وَبَرَكَاتُهُ

எல்லாம் வல்ல அல்லாஹ்வின் திருப்பெயரால் துவங்குகிறேன். எனது அன்பிற்குரிய , நமது கல்விக் கூடங்களின் பொறுப்பாளர் Mr. Shanavas அவர்களே நமது பெரும் மதிப்பிற்குரிய எல்லா பஞ்சாயத்து தலைவர்களே எல்லா ஊர்களிலும் இருந்து வருகை தந்திருக்கும் அனைத்து ஜமாஅத் தலைவர்களே,

நமது கல்விக்கூடங்களின் ஆசிரியர் பெருந்தகைகளே, பெற்றோர்களே, சிறார்களே, மாணவச் செல்வங்களே இந்த மூன்றாவது UKG மழலைச் செல்வங்களின் பட்டமளிப்பு விழாவில் உங்கள் அனைவரையும் அன்புடன் வரவேற்பதில் பெரும் மகிழ்ச்சி அடைகிறேன்.

தங்கள் அனைவரையும் நேராக சந்திக்க வேண்டும் என்ற பேர் அவா இருந்தும் ஆஸ்திரேலியாவில் எனது பணியின் பொறுப்பின் காரணத்தினால் வரமுடியாததற்கு உண்மையிலேயே வருந்துகிறேன்.

இன்ஷா அல்லாஹ் வரக்கூடிய நமது கல்விக்கூடங்களின் ஆண்டு விழாக்களில் கலந்து கொண்டு உங்கள் அனைவரையும் நேரில் சந்திக்க வேண்டும் என்று ஆவலாக உள்ளேன்.

இந்த முக்கியமான தருணத்தில், மகிழ்ச்சியான நேரத்தில் உங்கள் அனைவர்களுக்கும் எனது உள்ளங் கனிந்த நல் வாழ்த்துக்களை கூறிகொள்கிறேன்.

مبارك Congratulations , நல் வாழ்த்துக்கள்.

குர்ஆனின் சூரா பனி இஸ்ராயில் 23-வது அத்தியாயத்தில் ஒரு வார்த்தை மட்டும் இந்த சிற்றுறையில் விமர்சிக்க நினைக்கிறேன். وَبِالْوَالِدَيْنِ اِحْسَانًا Be Kind to Your Parents உங்களின் பெற்றோர்களுடன் கருணையாக நடந்து கொள்க.

குர்ஆனின் விரிவுரை நிபுணர்கள் இவ்வார்த்தையை (Master Concept of Ihsan) என்று கூறுகிறார்கள்.

காலத்தை மூன்று முறையாக பிரிக்கின்றோம்.

**Yesterday, Today and Tomorrow**

## நேற்று, இன்று, நாளை.

- இன்று என்பது நாம்.
- நேற்று என்பது நமது பெற்றோர்கள்.
- நாளை என்பது நமது பிள்ளைகள்.

وَبِالْوَالِدَيْنِ اِحْسَانًا Today இன்றையவனாகிய நீ, நேற்றையவர்களான உனது பெற்றோர்களுடன், கருணை உள்ளவனாக நடந்து கொள்.

Today இன்றையவர்களான நீங்கள் கூடிய விரைவில் Yesterday நேற்றையவர்களாக ஆகிவிடுவீர்கள். Tomorrow நாளையவர்களான உங்கள் பிள்ளைகள் கூடிய விரைவில் Today இன்றையவர்களாக ஆகி உங்களுடைய இடத்திற்கு வந்து விடுவார்கள்.

Today இன்றையவர்களான நீங்கள் நாளையவர்களான உங்கள் பிள்ளைகளை தயார் செய்யுங்கள்.

வாழ்க்கையின் நெறிமுறைகளின் ஒளி விளக்கை அவர்களிடம் ஒப்படைத்து விடுங்கள். இதைத்தான் அல்குர்ஆன் وَبِالْوَالِدَيْنِ اِحْسَانًا என்ற மாஸ்டர் கான்செப்டில் வர்ணித்து சுருக்கமாக கூறுகின்றது.

அதாவது ஒன்றும் அறியாத பலகீனமான Tomorrow நாளையவன் பலமுள்ள வல்லவனாக Today இன்றையவனாக மாறுகின்றான். போகப் போக இவனோ ஆற்றல் அற்றவனாக, வலு இல்லாதவனாக Yesterday நேற்றையவனாக மாறிவிடுகின்றான் இதைத்தான் அல்குர்ஆன் وَبِالْوَالِدَيْنِ اِحْسَانًا Be kind that your parents - பெற்றோர்களுடன் கருணையுள்ளவனாக நடந்துகொள் என்று கூறுகிறது.

Today என்ற இன்றைய மனிதன் வாழ்க்கை என்ற வாகன வண்டியை தனது லட்சியத்தை விரைவில் அடைவதற்காக வேகமாக ஓட்டுகின்றான். வாழ்க்கை என்ற அந்த சக்கரம் வேகமாக ஓடுகின்றது - ஓடுகின்றது ஓடிக்கொண்டே இருக்கின்றது. The wheels of life run so fast. இங்கேதான் அவனது உடல்நிலை மாறுபடுகின்றது. தலையில் நரை வெள்ளை முடியாக வளர ஆரம்பிக்கின்றது. முகத்திலும் உடலிலும் சுருக்கங்கள் ஏற்படுகின்றன.

வலிமையும் சக்தியும் உடைய Today இன்றையவன் சிறுக சிறுக பலகீனமான Yesterday நேற்றையவனாக மாறிவிடுகின்றான் இதைத்தான் அல்குர்ஆன் وَبِالْوَالِدَيْنِ اِحْسَانًا இதை என்று சுருக்கமாக விமர்சிக்கின்றது.

அன்பார்ந்த பெரியோர்களே, சமுதாயத் தலைவர்களே ஆசிரியர் பெருந்தகைகளே எனது மாணவச் செல்வங்களே அறிவாற்றல் உள்ள நாளையவர்களை உருவாக்குவதும் உலக வாழ்க்கையின் எழுச்சிகளையும் வீழ்ச்சிகளையும் எதிர்கொள்ள அவர்களை தயார் படுத்துவதும் இன்றையவர்களாகிய நம் மீது கட்டாய கடமையாகும். இதைத்தான் இஸ்லாம் فرض كفاية Collective Duties and Responsibilities ஒட்டுமொத்த சமுதாயத்தின் கடமை என்று கூறுகின்றது. அதாவது கல்விக்கூடங்களை உருவாக்குவது அற்புதமான நூலகங்கள் மற்றும் ஆய்வுக்கூடங்களை அமைத்துக் கொடுப்பது அமைதியான சுற்றுச்சூழல்களை அமைத்து கொடுப்பது இவை அனைத்தும் சமுதாயத்தின் மீது கடமையாகும். இதைத்தான் இங்கிலீஷில் கூறுவார்கள் To educate a child the whole village should get involved. ஒரு மாணவனை உருவாக்க ஒரு கிராமமே ஒன்று சேர்ந்து வேலை செய்ய வேண்டும்.

கண்ணியத்திற்குரிய பெற்றோர்களே அல்கலம் பள்ளி அமைதியும் இயற்கையும் உள்ள சுற்றுச்சூழலில் தரம் வாய்ந்த கல்விக் கூடங்களை அமைத்து நாளையவர்களான நமது மாணவச் செல்வங்களை தகுதி ஆற்றல் திறமையுள்ளவர்களாக உருவாக்க அல்கலம் பள்ளி உறுதியுடன் உள்ளது. இதை வெற்றியடையச் செய்வது நம் ஒவ்வொருவர் மீதும் கடமையாகும். நாம் அனைவரும் ஒன்று சேர்ந்து இப்பயணத்தை தொடர வேண்டும், இப்பாதையில் ஒன்று சேர்ந்து நடக்க வேண்டும்.

பெற்றோர்களே ஆசிரியர்களே ஜமாத்தார்களே சமுதாய தலைவர்களே நமது நிர்வாகம் நாம் அனைவரும் ஒன்று சேர்ந்து நடந்து வெற்றி அடைவோமாக ஆமீன். மீண்டும் ஒருமுறை தாங்கள் அனைவரையும் வரவேற்பதில் பெரு மகிழ்ச்சி அடைகிறேன் வாழ்த்துக்கள் கூறி விடைபெறுகிறேன்.

“அஸ்ஸலாமு அலைக்கும் வரஹ்மத்துல்லாஹி வபரக்காத்துஹூ”